**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

Case No: **SPL.S.C.No.20/2024**
Prosecution Witness : **LW - 11 / PW - 8**
Name : ரவி
Taluk :
S/o. :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **09.07.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை (அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆகவில்லை, நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர் ஆனார். சாட்சி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் என்பதால் தாமாக வாக்குமூலம் அளித்தார்.)**

நான் தற்போது அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 22.01.2024 அன்று மீன்சுருட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, மனுதாரர் ராஜேஸ்வரி, க/பெ.சுப்பிரமணியன், மேலத்தெரு, ரெட்டிபாளையம், அரியலூர் மாவட்டம் என்பவர் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது, அவரிடம் வாக்குமூலம் பெற்று, அன்றே நிலைய மனு எண்.52/2024 கொடுத்தேன். பின்பு 30.01.2024 அன்று நிலைய குற்ற எண்.32/2024, சட்ட பிரிவுகள் 448, 294(b), 323, 506(i) of IPC, r/w 4 TNPWH Act, 3(1)(r&s), 3(2)(va) SC/ST Act ன் படி வழக்கு பதிவு செய்து, அதன் நகலை மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்றொரு நகலை விசாரணைக்காக உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து DSP விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் எதிரிகள் சம்மந்தப்பட்ட இடம் சம்மந்தமாக தகராறு இருந்தது என்றால் ஆமாம். நான் புகார் பெற்ற உடன் அ.சா.1 யை விசாரித்தேனா என்றால் இல்லை, அவர் திருச்சி சென்று விட்டார். 22.01.2024 ல் புகார்மனு பெற்று 30.01.2024 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கு காலதாமதம் ஏன் என்றால் புகார்தாரரால் தான் அந்த காலதாமதம் ஏற்பட்டது. சாட்சிகளை விசாரணை பற்றி எனக்கு எதுவும் தெரியாது, DSP தான் விசாரித்தார். அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் வாதியிடம் வாக்குமூலம் பெற்றபோது, 1 வது எதிரி அங்கு சிகிச்சையில் இருந்தார் என்றால் இல்லை.**

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.